# விமர்சன நோக்கில் அறிஞர் அண்ணாவின் 'வேலைக்காரி' நாடகம் Scholar Anna's play 'The Maid' in Critical Perspective

முருகையா சதீஸ் | Murukaiya Sathees

உதவி விரிவுரையாளர், தமிழ்த்துறை, யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம், இலங்கை. (Assistant Lecturer, Department of Tamil, University of Jaffna, Sri Lanka.)
satheesmurukaiya@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

விமர்சனம் என்பது இலக்கிய இரசனை மற்றும் மதிப்பீட்டு முறைகளை உள்ளடக்கியதாகும். வாசிப்பின் போது கிடைக்கின்ற அனுபவங்களும் , பொருள்களும், உணர்வுகளும்தான் அதன் அடிப்படையாகும். எனவே விமர்சன அணுகுமுறையில் அண்ணாவின் "வேலைக்காரி" எனும் நாடகத்தைப் பார்ப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும். அறிஞர் அண்ணா தமிழ் இலக்கிய உலகில் பெரும் புரட்சியை ஏற்படுத்திய ஒரு படைப்பாளி. சமூக மேல்மட்டங்களை மையமாகக் கொண்டும், அரச மற்றும் இறை சிந்தனையுடைய கருப்பொருள் வெளிப்பாட்டு முறையிலும் நடிக்கப்பட்டு மேடையரங்கேற்றம் செய்யப்பட்டு வந்த நாடக உலகில் சமூகக் கீழ்மட்டப் பிரச்சினைகளையும் கொண்டு வந்து பேசிய பெருமை இவரையே சாரும். சமூகத்தில் நடக்கும் பிரச்சினையின் எதிரொலியாகவே அறிஞர் அண்ணாவின் வேலைக்காரி எனும் நாடகம் அமைந்துள்ளது. அத்தகைய இவரின் வேலைக்காரி நாடகத்தினை வாசிப்பிற்கு உட்படுத்தி, மதிப்பீடு செய்து, வாசிப்பு அனுபவத்தினை விமர்சிப்புக்கு உட்படுத்தி, சமூகத்தில் இந்நாடகத்திற்குரிய வாசகப்பங்கீட்டை அதிகரித்து அதன் இருப்பினை நிலைநிறுத்திக்கொள்ளும் நோக்கிலேயே இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஏழைகளின் கண்ணீரின் வலி, சாதி ஒழிப்பு, போலி வழிபாடு, பணக்கார ஆதிக்கம் என்பவற்றைக் கடுமையாகச் சாடுகிறார். பணம் மட்டுமே வாழ்வு என்று நினைப்பவர்களுக்குப் பணம் இல்லை மனம் கொண்ட வாழ்வுதான் வாழ்வு என்பதனை இந்நாடகத்தின் வழி விளக்குவதில் வெற்றியும் கண்டுள்ளார் என்றே கூறமுடியும். இவ்வாய்விற்கு, முதன்மைத்தரவாக அறிஞர் அண்ணாவின் வேலைக்காரி நாடகப் படைப்புப் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன், அவரின் அந்நாடகம் சார்ந்த கட்டுரை நூல்கள் மற்றும் மின்னூடகக் கருத்துக்கள் போன்றவையும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**Abstract**

Criticism involves literary taste and evaluation methods. It is based on the experiences, objects, and feelings that are available during reading. So the purpose of this article is to look at Anna's play "The Maid" in a critical approach. Scholar Anna is a creator who caused a great revolution in the world of Tamil literature. He is credited with bringing social and grassroots issues to the world of drama, which has been staged with a focus on social upliftment and thematic expression of state and theological thought. Of the problem going on in the community; The echo is in the play Scholar Anna's Maid. The study aims to increase the reader's share of the play in the community by reading, evaluating, and critique the reading experience of the play. He laments the pain of the tears of the poor, caste annihilation, false worship and rich domination. For those who think that money is the

only life, it can be said that he has succeeded in explaining the way of this play that life is a life with no mind. For this study, the scholar Anna's maid play has been used primarily. Essays on his play And electronic comments have also been used.

**திறவுச்சொற்கள் (Keywords):** அறிஞர் அண்ணா, வேலைக்காரி, நாடகம், விமர்சன நோக்கு, Scholar Anna, Maid, Drama, Critical Perspective.

## அறிமுகம்

இலக்கியம் பற்றிய புரிந்து கொள்ளலில் விமர்சனத்தின் பங்கு மிக முக்கியமானது. நீண்ட இலக்கியப் பாரம்பரியத்தினைக் கொண்ட மொழிகள் தமக்கெனத் தனித்துவமான இலக்கிய ஆக்கம், இலக்கிய இரசனை மற்றும் இலக்கிய மதிப்பீட்டு முறைகளையும், கோட்பாடுகளையும், சிந்தனைகளையும் வளர்த்து வந்துள்ளமையினைக் காணலாம். ஆங்கிலத்தில் "லிற்றறி கிறிற்றிசிசம்" (Literary Criticism) எனக் குறிப்பிடப்பெறும் புலமைத் தொழிற்பாடே இங்கு குறிப்பிடப்படுகின்றது. தமிழில் திறனாய்வு, விமர்சனம் என்ற இரண்டு சொற்களுமே இந்தப் பொருளில் வழங்குகின்றன. (சிவத்தம்பி. கா, விமர்சனச் சிந்தனைகள் : 15). விமரிசை என்ற சொல்லில் இருந்து வந்தது விமர்சனம். விளக்கமாகச் சொல்லுதல், பாராட்டிப்பேசுதல் என்று பொருள். அதாவது வாசிப்பின் போது கிடைக்கின்ற அனுபவங்களும், பொருள்களும், உணர்வுகளும்தான் திறனாய்விற்குத் தளங்கள் என்பது கருத்து. (நடராசன் தி.சு., திறனாய்வுக்கலை : 4) எனவே விமர்சன அணுகுமுறையில் அண்ணாவின் "வேலைக்காரி" எனும் நாடகத்தைப் பார்ப்பதே இக்கட்டுரையின் நோக்காகும்.

## ஆய்வு முறையியல்

இவ்வாய்வானது பண்புசார் முறை, விபரணப் பகுப்பாய்வு முறை ஆகிய அணுகுமுறைகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்விற்கு, முதன்மைத்தரவாக அறிஞர் அண்ணாவின் வேலைக்காரி நாடகப் படைப்புப் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன், அவரின் அந் நாடகம் சார்ந்த கட்டுரை நூல்கள் மற்றும் மின்னூடகக் கருத்துக்கள் போன்றவையும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

## ஆசிரியர்

அறிஞர் அண்ணா தமிழ் இலக்கிய உலகில் பெரும் புரட்சியை ஏற்படுத்திய ஓர் படைப்பாளி. குறிப்பாக நாடக உலகில் தனக்கென்று ஓர் அடையாளத்தினை ஏற்படுத்திய பெருமைக்கு உரியவர். சமூக மேல்மட்டங்களை மையமாகக் கொண்டும், அரச மற்றும் இறை சிந்தனையுடைய கருப்பொருள் வெளிப்பாட்டு முறையிலும் நடிக்கப்பட்டு மேடையரங்கேற்றம் செய்யப்பட்டு வந்த நாடக உலகில் சமூகக் கீழ்மட்டப் பிரச்சினைகளையும் கொண்டு வந்து பேசிய பெருமை இவரையே சாரும்.

சமூக விழிப்புணர்வுக் கருத்துக்களை வெளிப்படுத்தித் தன் அரசியல் பிரச்சாரப் பயணத்திற்கு ஒரு கருவியாக நாடக இலக்கியங்களைப் படைத்தார். இவரின் பேச்சு மற்றும் எழுத்து வன்மையால் சமூகத்தின் சகல மட்டங்களிலும் இடம்பிடித்துப்போன நாடகப்படைப்புக்கள், தமிழக நாடக அரங்கில் புதிய வேகத்தையும், துரித எழுச்சியையும் கொடுத்தன. தமிழுணர்ச்சி மற்றும் பகுத்தறிவுச் சிந்தனைகள் இவரின் இந்நாடகப் படைப்புக்கள் மூலம் வீரியம் கொண்டன.

அண்ணாதுரை எழுதிய நாடகங்களில் பிரச்சார நோக்கம் வரிக்கு வரி தெரிந்தாலும், செயற்கைத்தனமும், அலங்காரத் தமிழும் ஓரளவு குறைவாகவே இருக்கும். நாடகங்களில் அதிசயத் தற்செயல் நிகழ்வுகள் மிக அதிகமாகவே காணப்படும். எனவே சமூகப்பற்றுக் கொண்ட இவர், தன்னுடைய "வேலைக்காரி" எனும் நாடகத்தின் மூலம் வர்த்தக மோதல்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமூகக் கருப்பொருளையும், தற்போதுள்ள சமூகப் பழக்கவழக்கங்களையும், தனது பகுத்தறிவுச் சிந்தனை மூலம் விமர்சிக்கிறார்.

**வேலைக்காரி**

அறிஞர் அண்ணா 1944 ஆம் ஆண்டு எழுதிய நாடகமே "வேலைக்காரி". இது 92 பக்கங்களையும், 54 காட்சிகளையும் கொண்டு பகுத்தறிவுச் சிந்தனையை வெளிப்படுத்துகின்றது. வீட்டிற்குப் பணிக்கு வரும் வேலைக்காரியை, எமைப் போன்ற உணர்வுள்ள உயிராக யாரும் எண்ணுவதில்லை. வீட்டைச்சுத்தம் செய்யப் பயன்படுத்தும் துடைப்பத்தைப் போல எல்லோரும் நினைத்து வந்த காலத்தில் வேலைக்காரிக்கெனத் தனி மதிப்பைத் தேடித்தந்ததுடன் அந்தக் கீழ்ப்பட்ட சமூகத்திற்கு மதிப்புக்கொடுக்க வேண்டிய உணர்வையும் இந்நாடகத்தின்வழி அண்ணா ஏற்படுத்தித் தந்துள்ளார் என்றுதான் சொல்லத் தோன்றுகிறது.

ஒவ்வொரு மேலிடங்களிலும் வேலைக்காரிக்கு நடக்கும் சமூகக் கொடுமைகளைத் தெளிவாக விளக்கிய அண்ணா, ஏழைகளின் கண்ணீர் வாழ்வு, வர்ணப்பாகுபாடு, சமயப்பொய்மை, பண அதிகாரம் முதலிய சமூகப் பிரச்சினைகளையும் இந்நாடகத்தின் வாயிலாகச் சுட்டியிருக்கின்றார். இந்நாடகம் 1949 ஆம் ஆண்டு ஏ.எஸ்.ஏ.சாமியின் இயக்கத்தில், ஜீபிடர் பிக்சர்ஸ் சோமு தயாரிப்பில் திரைப்படமாகவும் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது.

கே.ஆர்.ராமசாமி – ஆனந்தனாகவும், பாலையா – மணியாகவும், நம்பியார் - மூர்த்தியாகவும், எம்.ஜி.ஆரை மணந்து கொண்ட வி.என்.ஜானகி – கதாநாயகியான அமிர்தமாகவும் நடித்திருந்தனர். பணம் கொண்ட வாழ்வுதான் நிறைவான வாழ்வு என்று செயற்பட்டுக் கொண்டிருந்த சமூகத்தினைக் கண்டித்து, மனம் கொண்ட வாழ்க்கைதான் நல்ல நிறைவான வாழ்க்கை என்பதனை இவ் "வேலைக்காரி" எனும் நாடகத்தின் மூலம் வெளிப்படுத்துகின்றார்.

**பாத்திரப்படைப்பு**

இந்நாடகத்தில் பணம்தான் பிரதானம் என்று நினைத்து வாழும் 'வேதாசல முதலியார்' மற்றும் அவருடைய மகள் 'சரசா', ஏழைகளின் மேல் இரக்க குணம் படைத்த அவரின் மகன் 'மூர்த்தி', வேலைசெய்யும் வீட்டு வேலைக்காரியான 'அமிர்தம்', அவ்வூரிலே வாழும் 'சுந்தரம்பிள்ளை', அவருடைய மகன் 'ஆனந்தன்', ஆனந்தனுடைய நண்பன் 'மணி' முதலியோர் இந்நாடகத்தின் முக்கிய பாத்திரங்களாகப் படைக்கப்பட்டுள்ளனர்.

மேலும், வேலைக்காரனான 'சொக்கன்', அமிர்தத்தின் தந்தை 'முருகேசன்', அமிர்தத்தின் அம்மா 'முத்தாயி', 55 வயது மாப்பிள்ளையின் தங்கச்சி 'பாக்கியம்' முதலியோரும் இந்நாடகத்தில் வந்துபோகும் முக்கிய பாத்திரங்களாகப் படைக்கப்பட்டுள்ளனர். தன்னுடைய கருத்துக்களைச் சரியான முறையில் சொல்வதற்குத் தகுந்த பாத்திர வகைமாதிரிகளை அவ்வாறே தெரிவு செய்து தன் படைப்பில் கச்சிதமாகப் படைத்துள்ளார் என்றே கூறமுடியும்.

**கதைச்சுருக்கம்**

வேதாசல முதலியாரின் வீட்டிற்குச் 'சொக்கன்' துணிப்பார்சல் கொண்டு வருகிறான். அது 'சரசம்மா' மாதர் சங்கத்தில் டான்ஸ் ஆடக் கேட்டிருந்த துணி என்று வேதாசலத்திடம் சொக்கன் கூறியதும், அமிர்தம் சரசாவை அழைத்துவரச் செல்கிறாள். சரசாவும் தந்தையிடம் செல்கிறாள். இத்துணியின் பணத்தினை மாதர் சங்கத்திலே வாங்கித் தரும்படி தந்தை கூறவும் அதற்கு உடன்படுகிறாள். கடன் வாங்கிய 'சுந்தரம்பிள்ளையை' என்ன செய்யலாம் என்று வேதாசலம் கேட்க, அவனை அரஸ்ட் பண்ணலாம் எனச் சொல்கிறான் 'சொக்கன்'.

கையில் காசில்லாத சுந்தரம்பிள்ளை இப்பிரச்சினைகளால் தற்கொலை செய்து கொள்கிறான். சுந்தரம்பிள்ளையின் மகன் 'ஆனந்தன்' வேலைமுடித்து கையில் 2000 ரூபாய் பணத்துடன் வெளியூரில் இருந்து வருகிறான். வீட்டிற்கு வந்து தந்தையின் உடல் தூக்கிட்டு இருப்பதைப் பார்த்து அதிர்ச்சியடைகின்றான். அப்பா எழுதி வைத்த கடிதத்தைப் படித்து வேதாசலமே இதற்கெல்லாம் காரணம் என்பதை உணர்ந்து கொள்கிறான்.

மாதர் சங்கத்தில் சரசாவின் நாடகம் அரங்கேறி முடிகிறது. சரசாவின் சேலையை அமிர்தம் மடித்து வைத்து அழகு பார்க்கிறாள். அதைக்கண்ட சரசா அவளைத் திட்டுகிறாள். செருப்பினைத் துடைத்து வைக்கும்படி பேசுகிறாள். இதைப்பார்த்த 'மூர்த்தி' சரசாவைப் பணத்திமிர் பிடித்தவள் எனத் திட்டுகிறான். இந்த நிலையில் ஆனந்தன் வேதாசலத்தைக் கொலை செய்ய எண்ணுகிறான். அவனுடைய நண்பன் 'மணி' அதனைத் தடுத்து "கத்தியினைத் தீட்டாதே புத்தியைத் தீட்டு" என்கிறான்.

அமிர்தத்திற்குத் திருமண ஒழுங்கு செய்யும் நிகழ்வு நடக்கிறது. அமிர்தத்தின் தந்தை 'முருகேசன்' தன் மகள் திருமணத்திற்கு மறுப்பதாகவும், மாப்பிள்ளைக்கு வயதாகியதே காரணமாம் என்பதையும் வேதாசலத்திடம் கூறுகிறான். வேதாசலம் அமிர்தத்தினை அதட்டி அறிவுரை சொல்கிறான். அமிர்தத்தின் செயலைக் கண்ட சரசாவும் அமிர்தத்தைப் பேசுகிறாள். மூர்த்தியோ அமிர்தத்திற்கு ஆதரவாகப் பேசி, கல்யாணத்தினை நிறுத்த ஒரு திட்டம் தீட்டிக்கொடுக்கிறான். மாப்பிள்ளைவீடு பெண்பார்க்க வருகின்றார்கள். அமிர்தத்தைத் தனியே அழைத்து மாப்பிள்ளையின் தங்கச்சி தனியாகப் பேசுகிறாள். அமிர்தத்தின் மூளிக்கண்ணையும், தெத்துப்பல்லையும் பார்த்துப் பயந்து பெண் வேண்டாம் எனப் போகின்றனர். நடந்ததை மூர்த்தியிடம் சொல்கிறாள் அமிர்தம். மூர்த்திக்கு அமிர்தம்மீது ஒரு கண். சரசா வருவதைக்கண்டு அவ்விடம் விட்டு நகருகின்றாள் அமிர்தம்.

ஆனந்தனின் நண்பன் 'மணி' கடன் கொடுத்தவனிடம் காசு வாங்கவில்லை எனக் காளி கோயிலில் அடித்துச் சத்தியம் செய்கிறான். கடன் கொடுத்தவன் ஆனந்தனை மானக்கேடாகத் திட்டவும் அவனுடைய வேலை போகிறது. இதனால் மனமுடைந்த ஆனந்தன் தற்கொலைக்கு முயல்கின்றான். அதைக்கண்ட மணி அவனைச் சமாதானப்படுத்தி காளி கோயிலுக்குக் கூட்டிச்சென்று காளியின் அருள் பற்றிப் பேசுகிறான். இறுதியில் நம்பிக்கை இழந்து காளியிடம் நீதி கேட்டுக் காளியை அசிங்கப்படுத்துகிறான் ஆனந்தன். பின் ஊரைவிட்டு இருவரும் புறப்படுகின்றனர்.

வழியில் இறந்த ஓர் உடலைக்கண்டு அது 'பரமானந்தன்' என்பதையும், அவன் வெளிநாட்டில் இருந்து தன் கண்தெரியாத தாயைப் பார்க்க வந்துள்ளான் என்பதையும் அதிலே கிடந்த டைரியின் மூலம் அறிகின்றனர். ஆள்மாறாட்டம் செய்ய முடிவெடுக்கின்றனர். பரமானந்தனின் தாயார், மணியை யார் என விசாரித்து பரமானந்தனின் நண்பன் என்றதும்

சந்தோசப்படுகிறாள். பரமானந்தனுக்கு வேதாசலத்தின் மகள் சரசாவைக் கட்டி வைக்க தாய் எடுத்த முடிவையும் கூறுகிறாள். பின் தேநீர் விருந்திற்கு வேதாசலத்தின் குடும்பத்தினை அழைப்பு விடுக்கின்றனர். தேநீர் விருந்தை ஆனந்தனும், மணியும் எப்படியோ சமாளிக்கின்றனர்.

சில நாட்களில் திருமணம் நடந்து முடிகிறது. வேதாசலத்தைப் பழிவாங்கும் திட்டங்களை மணி பரமானந்தனுக்குக் கூறுகிறான். திட்டம் போட்டது போலவே ஆரம்பத்தில் சரசாவைக் கொடுமைப்படுத்துகிறான் பரமானந்தன். மூர்த்தி, அமிர்தத்திடம் தன் காதலைச் சொல்கிறான். அடுத்த சில நேரங்களில் அமிர்தத்தைத் தவறாகப் பேசுகிறான் பரமானந்தன். அந்த இடத்திற்கு வந்த சரசாவும் வழமைபோலவே அமிர்தத்தை அதட்டுகிறாள். அதனைப் பார்த்த மூர்த்தி, பரமானந்தனை எச்சரிக்கிறான். மூர்த்தியும் அமிர்தமும் கொஞ்சிப் பேசிக்கொண்டிருப்பதை ஒருநாள் வேதாசலம் காணுகின்றார்.

அமிர்தத்தை ஊரை விட்டு அனுப்பி விடலாம் என வேதாசலம் கூற, வாழ்ந்தால் அவளோடுதான் வாழ்வேன் என்கிறான் மூர்த்தி. மூர்த்தி சென்னை சென்று நண்பர்களின் உதவியுடன் அமிர்தத்தைத் திருமணம் செய்ய முடிவெடுக்கிறான். ஆனால் சொந்த சாதியில் திருமணம் செய்து வைக்க அவளுடைய தந்தை 'முருகேசன்' முயல்கிறான். பரமானந்தன் வேதாசலத்துடன் சண்டை போட்டுக் கொண்டு சரசாவையும் அழைத்துச் செல்கிறான்.

குரு ஹரிஹரதாஸ் இருக்கும் ஆசிரமம் பெண்களின் உல்லாச விடுதி என்பதை உணர்ந்து ஹரிஹரதாஸைக் கொலை செய்கிறான் மூர்த்தி. பின் வழக்கிலிருந்து விடுதலையாகி வந்து அமிர்தத்தைக் காணுகிறான். பல காலம் பிரிந்திருந்ததால் அடையாளம் மாறிப்போன அமிர்தமும் மூர்த்தியும் பாலுவின் வீட்டில் சந்திக்கின்றனர். மூர்த்திக்கும் அமிர்தத்திற்கும் திருமணம் நடக்கிறது. ஆனந்தன் நடந்த அத்தனை உண்மைகளையும் கூறுகிறான். அனைவருடைய வேடமும் கலைகின்றது. "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்பது நிரூபிக்கப்படுகிறது. இவ்வாறு இரசனை மிகுந்ததாக நாடகம் முடிகின்றது.

**பணக்கார அதிகாரமும், ஏழைகளின் உரிமை மறுப்பும்**

வேலைக்காரியான அமிர்தத்திற்கு 'சரசா' செய்யும் கொடுமைகளின் வழி வேலைக்காரியை ஏனைய மனிதர்களைப் போல நினைக்காமல் அடிமையாக நினைக்கும் இச்சமூகத்தினை அறிஞர் அண்ணா வன்மையாகக் கண்டிக்கிறார். சரசாவின் கூற்றுக்கள் கீழ்சமூகத்தினை அடக்கி வைத்திருக்கும் எண்ணப்பாட்டினையே இங்கு காட்டுகின்றன. "ஒரு வேலைக்காரிக்கு வேண்டிய அடக்கம், ஒடுக்கம் மட்டுமரியாதை ஒன்றுமே உன்கிட்டே கிடையாது" என்ற சரசாவின் கூற்று இதனை உறுதி செய்கிறது.

மேலும், மேலிட வர்க்கத்தினர் பார்வையில் வேலைக்காரிகள் அடிமைகளாகச் சேவகம் புரிய வந்தவர்கள் என்ற எண்ணமே மிகுந்திருக்கிறது. சரசாவின் புடைவையை ஒழுங்கு படுத்தி அப்புடைவையைத் தன்மீது போட்டு இரசிக்கும்போது அதனைக் கண்ட சரசாவின் எதிர்ப்பு வார்த்தைகள், வேலைக்காரிகள் அடிமைகள் என்ற நினைப்பை வெளிப்படுத்துகின்றன. "அம்மாளுக்குப் பேஸனிலே கேட்குது. ஏண்டி! உன் உடம்பில் இருக்கிற அழுக்குப்பட்டால் என்னத்துக்கடி ஆகும் சேலை" எனும் சரசாவின் கூற்று இதனைக் காட்டுகிறது. சரசா வேலைக்காரியின் பெயரைக்கூட 'அமிர்தம்' என்று கூறாமல், அவளைக் 'குப்பி' என்று கணவர் பரந்தாமனிடம் அறிமுகம் செய்வதும் இங்கு நோக்கத்தக்கது. வேலைக்காரர்கள் என்றும் கீழ்மையானவர்கள் என்ற அவர்களின் உணர்வினை இது வலியுறுத்துகின்றது.

ஏழைகளின் செயற்பாடுகளில் அதிகாரமாகத் தலையிடும் நிலையில் பணக்காரர்கள் இருப்பதாகவும், ஏழைகளின் மனநிறைவு இங்கு சீரழிக்கப் படுவதாகவும் காட்டுகின்றார் அண்ணா. வயதானவரைத் திருமணம் செய்ய அமிர்தம் மறுக்கும் போது, "இந்தா அமிர்தம்! கல்யாணங் காட்சியை முடித்து வைப்பது பெரியவங்க காரியம். வயசாயிடுத்து அது இது என்று என்னென்னவோ சொல்றியாமே" என்று வேதாசல முதலியார் அதட்டுவதில் ஏழைகளின் முடிவினை யாரும் ஏற்பதாக இல்லை என்பதைக் காட்டுகின்றது.

பணமில்லாத ஏழைகளை நாயாகக் கருதும் எண்ணத்தினை வேதாசல முதலியாரின் கூற்றின் மூலம் காட்டுகின்றார் அண்ணா. வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாத சுந்தரம் பிள்ளையை 'நாய்' என்று கூறுகிறார். "இந்த நாயைத் தெருவழியாக இழுத்துக் கொண்டு போகச் சொல்லு ஜெயிலுக்கு" எனும் கூற்று இதனை உறுதி செய்கிறது. ஏழைகளின் உழைப்பினையும், உணர்வுகளையும் புரிந்து கொள்ளாமல் பணத்தின் மீது மட்டும் மோகம் கொண்ட மேல் மட்டத்தின் கீழ்மைக் குணத்தினை இந்நாடகத்தின் மூலம் அறிஞர் அண்ணா போட்டுடைக்கின்றார்.

அதுமட்டுமன்றி ஏழைப்பெண்களின் கற்பினைத் தமது பணவலிமை மூலம் கெடுத்து விடலாம் என்ற எண்ணமும் பணக்கார வர்க்கத்திடம் இருப்பதாகவும் காட்டுகின்றார். மூர்த்தி, வேலைக்காரியுடன் நெருங்கிப் பழகுவதைக் கண்ணுற்ற வேதாசலம், "அந்தப் பொண்ணை டச்சுக் கிச்சு பண்ணியிருந்தா சொல்லுடா இப்பவே காசு பணம் கொடுத்துக் கழுதைங்களை ஊரைவிட்டு ஓட்டிவிடலாம்" என்று தன் மகன் மூர்த்தியிடம் கூறும் தன்மை அவர்களின் பண ஆதிக்கத்தினையும், திமிரையும் பறைசாற்றுகின்றது.

எனவே வேலைக்காரியும், ஏழைகளும் என்றும் தமக்குச் சேவகம் புரிபவர்கள். அவர்கள் என்றும் தமக்குக் கீழ்ப்பட்டவர்கள் என்ற நிலையைத் தம் செயற்பாடுகள் மூலம் நிலைநிறுத்தி விடும் எண்ணம் பணக்கார மேல்மட்டத்தினரிடம் உண்டு என்பதே இந் நாடகத்தின் வழி அறிஞர் அண்ணா வெளிப்படுத்துகின்றார். தமக்காக வீட்டில் வேலை செய்யும் இந்த வேலைக்காரியை ஒரு பொருட்டாக மதிக்காத பணத்திமிர் பிடித்த மனிதர்களின் மனவுணர்வையும் இங்கு அண்ணா வெளிப்படுத்துவது குறிப்பிடத்தக்கதாகும்.

**பகுத்தறிவுச் சிந்தனைகள்**

அறிஞர் அண்ணா பொய்மையான வழிபாட்டு முறைகளையும், மூடநம்பிக்கைகளையும், மதத்தலைவர்களின் போலியான செயற்பாடுகளையும் எதிர்க்கிறார். குறிப்பாக அவர் காளி வழிபாட்டு எதிர்ப்பினைப் பல இடங்களில் வெளிப்படுத்துகின்றார். அவ்வழிபாட்டினை மேற்கொள்பவனை 'பைத்தியக்காரன்' என்கிறார். இதனை, "பைத்தியக்காரன் உழைக்கிறான். மாடு போல சம்பாதிக்கிற காசையெல்லாம் கற்பூரமாக வாங்கிக் கொளுத்துறான்" என்று ஆனந்தன் ஏளனத்திற்கு உட்படுத்தப்படும் காட்சி உறுதிப்படுத்துகின்றது.

மேலும் கடவுளை நம்புவது, பைத்தியக்காரத்தனம் என்பது, வேதாசலத்தின் கொடுமைகளுக்குக் கொதிக்கும் ஆனந்தன் காளியிடம் உரையாடும் பகுதியின் மூலம் காட்டப்படுகின்றது. "நீ என்ன செய்வாய்! நான்தான் பித்தன். உன்னையே நம்பிக்கிடந்தேன் அது என் பைத்தியக்காரத்தனம். நயவஞ்சகத்தால் வேதாசல முதலியார் கொழுத்ததால் அது உன் அருளால் வந்தது என்று எண்ணினேன். அதுவும் என் பைத்தியக்காரத்தனம். எனக்கு இருந்த போதை தெளிந்தது" என்ற ஆனந்தனின் கூற்று உற்றுநோக்கத்தக்கதாகும்.

மேலும் அண்ணா, பகலில் சாமியாராகவும் இரவில் காம இச்சை கொண்ட போகியாகவும் இருக்கும் போலிச்சாமியார்களின் செயலையும் கண்டிக்கிறார். "ஹா கபட வேடதாரியே! காமுகா... பகலிலே யோகியாகவும் பாதி ராத்திரியிலே போகியாகவும் காட்சியளிக்கும் பேடிப்பயலே! ஆசிரமமா இது" என்ற மூர்த்தியின் ஆவேசக் கூற்று இதனை ஆதாரப்படுத்துகின்றது.

அதுமட்டுமன்றி சாதிக்கு எதிரான குரலையும் பதிவு செய்கிறார். வேற்று சாதிப் பெண்ணான அமிர்தத்தை மூர்த்திக்குத் திருமணம் செய்து வைப்பதன் மூலம் சாதி ஒழிப்பினை மேற்கொள்கின்றார். சாதி ஒழிப்பிற்கு நல்ல தீர்வாகக் கலப்பு மணத்தினை அறிமுகப்படுத்துவதும் குறிப்பிடத்தக்கது எனலாம். அறிஞர் அண்ணா, சமூகத்தில் இருந்த கீழ்த்தரமான சிந்தனைகளுக்கு எதிராகப் பகுத்தறிவுச் சிந்தனைகளை இந்நாடகத்தின் மூலம் வலியுறுத்துவதனூடாக சமத்துவமான சமுதாயத்தைக் காண விளைகின்றார் என்பதே உண்மை ஆகும்.

### முடிவுரை

"வேலைக்காரி" எனும் நாடகத்தினை நோக்கும் போது, சமூக விழிப்புணர்வுக் கருத்துக்களைப் பரப்பும் கலைக் கருவியாக அண்ணா இந்நாடகத்தினைப் பயன்படுத்தியுள்ளார். வீட்டுக்கு வரும் வேலைக்காரியை ஒரு ஜீவனாக மதிக்காத பணக்கார வர்க்கத்திற்கு ஒரு செருப்படியாக இது அமைந்துவிடுகிறது. வேலைக்காரர்களும் எம்மைப் போன்றவர்கள் என்ற சமூக சமத்துவத்தினை நிரூபித்திருக்கிறார் அண்ணா. வேலைக்காரிக்கு நடக்கும் கொடுமைகளினூடாகத் தன்னுடைய பகுத்தறிவுச் சிந்தனைகளை வெற்றிகரமாக விதைத்திருக்கிறார். ஏழைகளின் கண்ணீரின் வலி, சாதி ஒழிப்பு, போலி வழிபாடு, பணக்கார ஆதிக்கம் என்பவற்றைக் கடுமையாகச் சாடுகிறார். பணம் மட்டுமே வாழ்வு என்று நினைப்பவர்களுக்குப் பணம் இல்லை மனம் கொண்ட வாழ்வுதான் வாழ்வு என்பதனை இந்நாடகத்தின் வழி விளக்குவதில் வெற்றியும் கண்டுள்ளார் என்றே கூறமுடியும்.

### References


- Sivathambi, K. (1982). Critical Thoughts. Chennai: Public Release.
- Natarajan, T. S. (2003). Thiranaayvuk Kalai. Chennai: New Century Book House.
- Annathurai, C. N. (1971). Annavin Naadakankal. Chennai: Parimalam Publishing House.
- Scholar Anna. (2009). Maid. Chennai: Barry Publishing.
- Scholar Anna. (2010). Maid. Chennai: Gayatri Publications.
- https://www.bookmybook.in/product/velaikkari
- http://www.annavinpadaippugal.info/annavin_nadagangal.htm
- http://www.moolai.com/site/articleview.php?articlepagename=velaikkaari
- https://tamil.trendingonlinenow.in/a-view-on-velaikkari-drama-by-c-n-annadurai


*************************